




# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 145 | உள்ளூர் - 25.05.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 145 | வெளியூர் - 26.05.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


| வீடு வாங்க விரும்புவோருக்கு எளிய பரிகாரங்கள்! | த.நா ஊரக வாழ்வாதார இயக்கம்; 236 காலியிடங்கள்! | மதுரை மீனாட்சியம்மன் கோயில் அருகே சிறுவன் படுகொலை! | விஜய் ரசிகர்களுக்கு இரட்டிப்பு கொண்டாட்டம்! |
|---|---|---|---|

## இந்தியா என்னை 100 சதவீதம் நம்பலாம்: அமெரிக்க அதிபர் டிரம்ப்!

வாஷிங்டன், மே. 25–

இந்தியா என்னையும் எங்கள் நாட்டையும் 100 சதவீதம் நம்பலாம். எப்போதாவது உதவி தேவைப்பட்டால், எங்களை தொடர்புகொள்ளலாம் என்று டிரம்ப் கூறினார்.

அமெரிக்க சுதந்திரத்தின் 250–வது ஆண்டு விழாவை முன்னிட்டு டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொலைபேசி வாயிலாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பேசினார். அப்போது



டிரம்ப் கூறியதாவது: இந்திய பிரதமர் மோடி சிறந்த தலைவர்; அவர் என் நண்பர். மோடியின் மிகப் பெரிய ரசிகன். அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு இதுவரை இல்லாத அளவுக்கு நெருக்கமாக உள்ளது.

இந்தியா என்னையும் எங்கள் நாட்டையும் 100 சதவீதம் நம்பலாம். எப்போதாவது உதவி தேவைப்பட்டால், எங்களை தொடர்புகொள்ளலாம் என்றும் டிரம்ப் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் , அமெரிக்க வெளியுறவு மந்திரி மார்கோ ரூபியோ , இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்கியோ கோர் ஆகியோர் பங்கற்றனர்.

## இந்தியாவும், அமெரிக்காவும் விரைவில் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இலக்கு!

புதுடில்லி, மே. 25–

இந்தியாவும், அமெரிக்காவும் விரைவில் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. அமெரிக்கக் குழு டில்லிக்கு வருகை தர உள்ளது என தகவல் வெளியாகி உள்ளது.

புதுடில்லியின் ஹைதராபாத் இல்லத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோவுடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை



நடந்தது. அப்போது வர்த்தக ஒப்பந்தம் குறித்து முன்கூட்டியே புரிந்து ணர்வு ஏற்படுவதன் முக்கியத்துவத்தை ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

இந்தியாவும், அமெரிக்காவும் விரைவில் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. அமெரிக்கக் குழு டில்லிக்கு வருகை தர உள்ளது என தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கூறியதாவது: எங்கள் வர்த்தகப் பிரதிநிதிகள் குழு மிக விரைவில் டில்லிக்கு வருகை தருவார்கள். அமெரிக்காவிற்கு இந்தியக் குழு வருகை தந்தது.

நாங்கள் மகத்தான முன்னேற்றம் கண்டுள்ளோம். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் நமது தேசிய நலனைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை நாம் எட்டுவோம். இவ்வாறு மார்கோ ரூபியோ கூறினார். இருநாடுகளுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்பது உறுதியாகி உள்ளது.

## விஜய் தலைமையில் உருவாகிறது மதச்சார்பற்ற சமூக நீதி கூட்டணி!

சென்னை, மே. 25–

‘ஆதரவு கட்சி தலைவர்களுடன் சேர்ந்து, பொதுக்கூட்டம் நடத்த, த.வெ.க., தலைவரும், முதல்வருமான விஜய் முடிவு செய்திருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலில், 108 தொகுதிகளில் வெற்றி பெற்று, தனிப்பெரும் கட்சியாக தமிழக வெற்றிக் கழகம் உருவெடுத்தது.

பெரும்பான்மை கிடைக்காமல், ஆட்சி அமைக்க தடுமாறிய த.வெ.க.,வுக்கு, தி.மு.க., கூட்டணியில் இருந்த காங்கிரஸ், வி.சி.க., – கம்யூ., கட்சிகள், முஸ்லிம் லீக் ஆகியவை ஆதரவு கொடுத்தன. இதனால், த.



வெ.க., தலைமையில் கூட்டணி ஆட்சி அமைத்து, விஜய் முதல்வரானார்.

இந்நிலையில், தனக்கு ஆதரவு அளித்த கட்சிகளுடன் இணைந்து, பிரமாண்ட பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த, முதல்வர் விஜய் முடிவு செய்துள்ளார். இந்த பொதுக்கூட்டம், ஆதரவு கட்சிகளை, த.வெ.க., கூட்டணி கட்சிகளாக அறிவிக்கும் விதமாக ஏற்பாடு நடக்கிறது.

த.வெ.க.,வின் மிக முக்கிய நிகழ்ச்சியாக கருதப்படும், இந்த பொதுக்கூட்டம், வெற்றி அடைய வேண்டும் என்பதற்காக, தனது ஆஸ்தான ஜோதிடரிடம், நல்ல நாளை கணித்து கொடுக்கும்படி, முதல்வர் விஜய் கூறி உள்ளார்.

அதன்படி, பட்ஜெட் கூட்டத்தொடருக்கு முன்பாகவே, பொதுக்கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், கோவை சிறுமி பாலியல் வழக்கு, மின் தடை பிரச்னை உள்ளிட்டவையால், நடத்த முடியவில்லை.

இந்த பொதுக்கூட்டத்தில், த.வெ.க., கூட்டணிக்கு, ‘மதச்சார்பற்ற சமூக நீதி கூட்டணி’ என பெயர் சூட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக, த.வெ.க., வட்டாரங்கள் தெரிவித்தன.



சென்னை, தலைமைச் செயலகத்தில் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 6 தையல் ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் பள்ளிக்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. சந்தர மோகன். B, பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ், இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) மு.இராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடும் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது

# துரிதமாக வழக்கு -விரைவாக விசாரணை

# கடும் தண்டனை..!

### முதலமைச்சர் உத்தரவு!!



சென்னை, மே. 25–

தமிழ்நாடு முதலமைச்சர் .ச.ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில், பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்கினை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும், காவல்துறை, சமூகநலத்துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் , பாலியல் குற்ற வழக்கினை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர வலியுறுத்தினார்கள். வழக்கினை முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத்தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. மணிவாசகன், அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் மரியம் பல்லவி பல்தேவ், காவல்துறை தலைமை இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர் காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மஹேஷ்வர் தயாள், காவல்துறை கூடுதல் இயக்குநர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) அனிதா ஹூசைன், காவல்துறை தலைவர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) சி. ராஜேஸ்வரி, காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) ஆஸ்ரா கர்க், ., காவல்துறை தலைவர் (சிங்கப்பெண்) . கே. பவானீஸ்வரி, மற்றும் அரசு உயர் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.

## சிங்கப்பெண் அதிரடிப்படை சேவையை மே 27-ல் தொடங்கி வைக்கிறார் முதல்மைச்சர் விஜய்!

சென்னை, மே. 27–

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தமிழக வெற்றிக் கழக அரசால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு பிரத்யேக காவல் பிரிவு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை.

இந்த சிறப்புப் பிரிவு ஐஜியாக பவானீஸ்வரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த சிங்கப்பெண் அதிரடிப்படை சேவையை மே 27–ல் ராஜரத்தினம்




விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் பிரமாண்ட விழாவில், முதலமைச்சர் விஜய் திறந்துவைக்கிறார்.

பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் போன்ற பெண்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் இப்படையினர் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

மேலும் இன்று தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பாகத் தலைமைச் செயலர், டிஜிபி மற்றும் சிங்கப்பெண் அதிரடிப்படை ஐஜி ஆகியோருடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளார்.

## திட்டமிட்டபடி ஜூன்1-ல் பள்ளிகள் திறக்கப்படுமா?

சென்னை, மே. 25–

சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது திட்டமிட்டபடி ஜூன்1–ல் பள்ளிகள் திறக்கப்படுமா? என செய்தியாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து அவர் பேசியதாவது;

“தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து ஜூன்1–ந்தேதி பள்ளிகள்




திறக்கப்படும் என முன்னதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடுமையான வெயில் காரணமாக பள்ளிகள் திறப்பை தள்ளிவைக்க வேண்டும் என சில கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஜூன் முதல் வாரத்தில் வெப்ப அலை இருக்குமா? அல்லது பருவமழை தொடங்குமா? என வானிலை துறையிடம் தகவல் கேட்டுள்ளோம். வானிலை அறிவிப்பு வெளியான பிறகு பள்ளிகள் திறப்பு குறித்து முதல்–அமைச்சர் விஜய்யிடம் ஆலோசிக்கப்படும். அதன் பின்னர் பள்ளி திறப்பு தேதி அறிவிக்கப்படும். பள்ளிகளில் காலை உணவு, மதிய உணவு திட்டங்கள் வழக்கம்போல தொடரும்.”

இவ்வாறு அவர் கூறினார்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 25.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 11-ம் தேதி

# டாஸ்மாக்: மே 26 தான் டெட்லைன்!




மே 10-ம் ஆம் தேதி அன்று விஜய், முதல்வர் பதவி ஏற்றதிலிருந்து தமிழக மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு எதிர்பார்ப்பு மதுவிலக்கு. அதற்கு ஏதுவாக ஆட்சி மாற்றம் வந்ததுமே முதல்வர் விஜய் பல அதிரடி உத்தரவுகளை பிறப்பித்தார். கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றுக்கு 500 மீட்டர் தொலைவில் இருக்கும் மது கடைகளை மூடுமாறு உத்தரவிட்டார். இந்நிலையில் அதிகாரிகள் சுமார் 717 மதுகடைகள் இதுபோன்ற இடங்களில் இருந்து கொண்டு மக்களுக்கு இடையூறு விளைவிப்பதாக தெரிவித்தனர். கண்டறியப்பட்ட மதுக் கடைகளை மூடுவதற்கு மே 26-ஆம் தேதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் உத்தரவின் பேரில் ஏற்கனவே இது போன்ற இடங்களில் இருந்த டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுவிட்டன. மீதமிருக்கும் 281 கடைகளை மூடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் அரசு அறிவித்த காலகடுவிற்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ளதால் அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். கூடுதலாக தமிழக முழுவதும் கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கே.விக்னேஷ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

டாஸ்மாக் கடைகளை மூடுவது குறித்த பிற அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் விக்னேஷ் ஆய்வுக் கூட்டங்களை நடத்தினார். அப்போது இதுவரையில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இயங்கி வந்த 436 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டு விட்டன என்றும், மீதமுள்ள 281 கடைகளை வரும் மே 26-ஆம் தேதிக்குள் மூட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். மேலும் மூடப்படும் டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களின் நலனை பாதுகாக்க, அவர்களை அருகில் இருக்கும் பிற கடைகளில் பணியமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அமைச்சர் விக்னேஷ் மேலும் சில அதிரடி விஷயங்களையும் தெரிவித்தார். அந்த வகையில் 717 கடைகளைத் தவிர்த்து இயங்கிக் கொண்டிருக்கும் மீதமுள்ள டாஸ்மாக் கடைகள் மற்றும் பார்களை இரவு 10 மணிக்கு மேல் ஒரு நிமிடம் கூட திறந்து வைக்க கூடாது என்றும், MRP விலைக்கு மேல் கூடுதல் விலையிலும் விற்பனை செய்யக்கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளார். அப்படி விற்பனை செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

டாஸ்மாக் கடைகளை மூடினால் கள்ளச்சாராயத்தின் விற்பனை அதிகரிக்கும் என்பதால் ,கள்ளச்சாராயம் காய்ச்சுவது மற்றும் அதை விற்பனை செய்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். ஒரு வேளை இது போன்ற விஷயங்களுக்கு யாரேனும் உடன்பட்டால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# வி.சி.க.-வில் இருந்து முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் பாபு விலகல்!

சென்னை, மே 25–

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் பாபு விலகியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

விசில் அடிப்பவர்கள் எல்லாம் திரையரங்கத்திற்குத்தான் செல்ல வேண்டும், சட்டமன்றத்திற்கு வரக் கூடாது. அவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் பேசிய அரசியலையும், கொள்கைகளையும் வீழ்த்துவதற்கு வந்தவர்கள்'' என்று சூளுரைத்த அவர், இன்று அவர்களுடனே கைகோர்க்கவும், இயக்கத்தின் கொள்கையை மழுங்கடிக்கவும் முற்படுவது முரண்பாட்டின் உச்சமாகும்.



ஆட்சி அதிகாரங்கள் வரும், போகும்; அது நிலையற்றது. ஆனால், அய்யா பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் நமக்கு வகுத்துத் தந்த கொள்கைகளே என்றென்றும் வாழும் நிலையான ஆயுதங்கள். அரசியல் தளத்தில், 'மக்கள் சித்தாந்தங்களை விடக் கவர்ச்சியின் பின்னால் ஈர்க்கப்படுவது ஆபத்தானது' என்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்.

ஆனால் இன்று அந்த அபாயகரம திசையில்தான் கொண்டிருக்கிறோமோ என அஞ்சுகிறேன். பயணித்துக் கொண்ட கொள்கையிலும், எடுக்கும் நிலைப்பாட்டிலும் உறுதியாக இல்லாமல், அடிக்கடி நிலைப்பாடுகளை மாற்றி, குழப்பத்திலும் அவநம்பிக்கையிலும் செயல்படும் ஒரு தலைமையின் கீழ் இனியும் என்னால் பயணிக்க இயலாது எனது மனசாட்சி உணர்த்துகிறது. எனவே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் முழுமையாக விலகுகிறேன் என்ற எனது முடிவைக் கனத்த இதயத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 'தலாய் லாமா தேர்வு விவகாரத்தில் இந்தியா தலையிடக்கூடாது' - சீனா எச்சரிக்கை!

சீனா, மே. 25–

தலாய் லாமாவின் வாரிசு தேர்வு என்பது சீனாவின் உள்நாட்டு விவகாரம் என்றும், இதில் இந்தியா தலையிடக்கூடாது என்றும் சீனா எச்சரித்துள்ளது.



திபெத் விவகாரத்தை முன்னிறுத்தி இந்தியா இதில் தலையிட்டால், அது இருதரப்பு உறவுகளை மேலும் சீர்குலைக்கும் ஒரு "முள்வேலிப் பிரச்சினையாக" மாறும் என்றும் சீனா கூறியுள்ளது. இதுதொடர்பாக சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள இந்தியாவிற்கான சீன தூதர் யூ ஜிங், "தலாய் லாமாவின் மறுபிறவி என்பது பல நூற்றாண்டுகளாக சீனாவின் மத்திய அரசின் ஒப்புதலைக் கோரும், நீண்டகாலமாக நிறுவப்பட்ட மதச் சடங்குகள் மற்றும் வரலாற்று மரபுகளைப் பின்பற்றுகிறது. தற்போதைய 14-வது தலாய் லாமாவும் இந்த நிறுவப்பட்ட செயல்முறையின் மூலமே அங்கீகரிக்கப்பட்டார்.

தலாய் லாமாவின் மறுபிறவி விவகாரம் முற்றிலும் சீனாவின் உள்விஷயமாகும், இதில் வெளித் தலையீடுகள் இருக்கக்கூடாது. "மத்திய திபெத்திய நிர்வாகம்" என்று அழைக்கப்படும் அமைப்பை எந்தவொரு இறையாண்மை கொண்ட நாடும் அங்கீகரிக்கவில்லை, மேலும் அதன் தலைமைக்கு திபெத்திய மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டப்பூர்வ தகுதியோ அல்லது மறுபிறவி செயல்முறை குறித்து உரிமை கோருவதற்கான அதிகாரமோ இல்லை.

திபெத் தொடர்பான விவகாரங்களில் இந்தியா தெளிவான உறுதிமொழிகளை அளித்துள்ளது. இந்தியா இந்த உறுதிமொழிகளைத் தொடர்ந்து மதிக்கும் என்றும், 'திபெத்திய சுதந்திரத்தை' ஆதரிக்கும் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு தளத்தையும் வழங்காது என்றும், தலாய் லாமாவின் மறுபிறவி விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்க்கும் என்றும் மனப்பூர்வமாக நம்பப்படுகிறது. இத்தகைய அணுகுமுறை நமது இருதரப்பு உறவுகளின் ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மைக்கும் மற்றும் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கும் சாதகமாக பங்களிக்கும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த ஆண்டு ஜூலை மாதம் தனது 90வது பிறந்தநாளில் பேசிய14-வது தலாய் லாமா, அடுத்த தலாய் லாமாவை அடையாளம் காணும் முழு அதிகாரம் தனது இலாப நோக்கற்ற அமைப்பான காடன் ஃபோட்ராங் அறக்கட்டளைக்கு மட்டுமே உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தினார். 14வது தலாய் லாமாவாக டென்சின் கியாட்சோ உள்ளார்.

# விளாத்திக்குளம் +2 மாணவி கொலைவழக்கு தீர்ப்பு!

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தை சேர்ந்த 17 வயதுடைய பிளஸ்-2 மாணவி, கடந்த மார்ச் மாதம் 10-ந்தேதி இரவில் இயற்கை உபாதை கழிப்பதற்காக அருகிலுள்ள காட்டுப்பகுதிக்கு சென்றார். பின்னர் அவர் திரும்பி வரவில்லை. மறுநாள் காலையில் அந்த மாணவி கொடூரமாக கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்த கொலை வழக்கில் தொடர்புடையவர்களை கைது செய்ய போலீஸார் 10 தனிப்படைகளை அமைத்து தேடி வந்தனர். அது போல் 5 பேரின் டிஎன்ஏக்களை சோதனை செய்தனர். தொடர்ந்து சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில், ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பவரை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்ட போக்சோ கோர்ட்டில் இது தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றது. வழக்கு விசாரணை முடிந்த நிலையில், கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரன் குற்றவாளி என கோர்ட் அறிவித்தது. குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு இதில் அவருக்கு இரட்டை மரண தண்டனை விதித்து தூத்துக்குடி நீதிமன்றம் அதிரடி தீர்ப்பளித்துள்ளது.





# நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விலை 4-வது முறையாக உயர்வு!

சென்னை, மே. 25–

இந்தியா முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் விலை இன்று மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் எரிபொருள் விலை உயர்த்தப்படுவது இது நான்காவது முறையாகும்.




அதன்படி, சென்னையில் பெட்ரோல் விலை லிட்டருக்கு ,ரூ.2.46 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு லிட்டர் ரூ.107.77 ஆக விற்பனையாகிறது. டீசல் லிட்டருக்கு ரூ.2.57 காசுகள் உயர்த்தப்பட்டு, ஒரு லிட்டர் ரூ.99.55 ஆக விற்பனை செய்யப்படுகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக, இந்திய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இந்த விலை உயர்வை அமல்படுத்தியுள்ளன.


இந்த தொடர் விலை உயர்வு நாடு முழுவதும் பணவீக்கம், போக்குவரத்து மற்றும் தினசரி பயணச் செலவுகள் ஆகியவற்றில் சங்கிலித் தொடர் விளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விலை உயர்வால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

# நிலவு பயணத்தை ஒட்டி 3 வீரர்களை விண்வெளிக்கு அனுப்பிய சீனா!

சீனா, மே. 25–

2030-ஆம் ஆண்டுக்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப வேண்டும் என்ற சீனாவின் லட்சியத்தில் ஒரு முக்கிய படியாக, சீனா தனது ஷென்சோ-23 திட்டத்தை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஏவியது. இதன் மூலம் முதல் முறையாக ஒரு சீன விண்வெளி வீரர் முழு ஓர் ஆண்டையும் சுற்றுப்பாதையில் செலவிடுவார்.



சீனாவின் வடமேற்கு கோபி பாலைவனத்தில் உள்ள ஜியுகுவான் ஏவுதள மையத்தில் இருந்து, லாங் மார்ச் 2-F ராக்கெட், இரவு 11:08 மணிக்கு (1508 GMT) திட்டமிட்டபடி தீப்பிழம்புகள் மற்றும் புகை மண்டலத்துடன் சீறிப் பாய்ந்த காட்சிகள் அடங்கிய வீடியோவை, அரசு ஒளிபரப்பு நிறுவனமான CCTV வெளியிட்டது.

சுமார் 10 நிமிடங்களுக்கு பிறகு விண்கலம் ராக்கெட்டில் இருந்து பிரிந்து சுற்றுப்பாதையில் நுழைந்ததாக சீன விண்வெளி நிறுவனம் (CMSA) சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளது. "விண்வெளி வீரர்கள் நலமாக உள்ளனர், மேலும் இந்த ஏவுதல் முழு வெற்றி பெற்றுள்ளது," என்று அது மேலும் கூறியது.

இந்தத் திட்டம், ஹாங்காங்கை சேர்ந்த ஒரு விண்வெளி வீரர் மேற்கொண்ட முதல் விண்வெளி பயணமாகும்: இவர், முன்பு ஹாங்காங் காவல் துறையில் பணியாற்றிய 43 வயதான லி ஜியாயிங் (காண்டனீஸ் மொழியில் லை கா-யிங்) ஆவார்.

# பிளவுபட்ட சமூகத்தில் இளம் தலைமுறையினர் தங்கள் துணையை தேர்ந்தெடுக்க கூட சுதந்திரம் இல்லை - உயர்நீதிமன்றம்

கடந்த 2004ஆம் ஆண்டு டெல்லியைச் சேர்ந்த ஓர் இந்து இளம்பெண்ணும், மேற்கு வங்கத்தை சேர்ந்த இஸ்லாமிய வாலிபரும் காதலித்து திருமணம் செய்துகொண்டனர்.



1954-ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி வாலிபரின் மாநிலமான மேற்குவங்கத்தில் அவர்களின் திருமணம் நடைபெற்றது. ஆனால், அந்தப் பெண்ணின் தந்தை தனது மகளை மைனர் என்றும் அந்த வாலிபர் தனது பெண்ணை கடத்திச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாகவும் போலீசில் புகார் அளித்தார்.

இதையடுத்து, 2008ஆம் ஆண்டு கீழமை நீதிமன்றம் அந்த வாலிபருக்கு கடத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளின் கீழ் தண்டனை விதித்தது.

இதனை எதிர்த்து 2009ஆம் ஆண்டு வாலிபர் தரப்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த இந்த மேல்முறையீட்டு வழக்கில், அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த உயர் நீதிமன்றம் வாலிபரை விடுவித்து உத்தரவிட்டுள்ளது.

தீர்ப்பின்போது பேசிய நீதிபதிகள், "வழக்கின் ஆவணங்களின்படி, அந்தப் பெண் தனது சொந்த விருப்பத்தின் பேரில் மட்டுமே அந்த வாலிபருடன் சென்றுள்ளார் என்பது தெளிவாகிறது. இருவருடைய திருமணச் சான்றிதழும் ஆவணங்களில் முறையாகப் பதிவாகியுள்ளது.

திருமணத்திற்குப் பிறகு, தான் கடத்தப்பட்டதாகப் பிறரிடம் தெரிவிக்க அந்தப் பெண்ணிற்குப் பல வாய்ப்புகள் இருந்தும் அவர் மௌனமாகவே இருந்துள்ளார். அவரின் இந்த மௌனமே அவர் சுயவிருப்பத்துடன் தான் இருந்தார் என்பதைக் காட்டுகிறது.

கீழமை நீதிமன்றத்தில் அந்தப் பெண், வாலிபருக்கு எதிராக அளித்த சாட்சியங்கள் அனைத்தும், சமூகம் அல்லது பெற்றோரின் கடுமையான கட்டாயத்தினாலும் அழுத்தத்தினாலும் அளிக்கப்பட்டவை என்றே தோன்றுகிறது. அந்தப் பெண் திருமணத்தின் போது 18 வயதிற்குட்பட்ட மைனர் என்ற புகார்தாரரின் வாதத்தையும் நீதிமன்றம் நிராகரித்துள்ளது:


மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி, அந்தப் பெண்ணிற்கு 18 வயது பூர்த்தியாகியிருக்க வாய்ப்புள்ளது.

ஒருவேளை அந்தப் பெண்ணிற்கு 18 வயதிற்குள் இருந்திருந்தாலும் கூட, 2004ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்த சட்டத்தின்படி, மனைவியின் வயது 15க்கு மேல் இருக்கும் பட்சத்தில் கணவர் மீது வழக்குப் பதிவு செய்ய சட்டத்தில் இடமில்லை.

சமூக அடுக்குகளும் அதில் பிளவுகளும் நிறைந்த இந்தச் சமூகத்தில், இளம் காதலர்களுக்குத் தங்களது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த எல்லைகளை மீறத்துணியும் இளைஞர்கள் தங்களது உயிரையே பணையம் வைக்க வேண்டிய அவலநிலை இன்றும் தொடர்கிறது" என்று தெரிவித்தனர்.

17 ஆண்டுகால நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, அந்த வாலிபர் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் ரத்து செய்யப்பட்டு, அவர் நிரபராதி என டெல்லி உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளார்.





# சொந்த வீடு வாங்க விரும்புவோருக்கு எளிய பரிகாரங்கள்!




**வாமனன் வழிபாடு:** திருவோண நட்சத்திரத்தில் தென்மேற்கு மூலையில் விளக்கேற்றி, வாமனனை நினைத்து பால் பாயசம் படைத்தால் சொந்த வீடு யோகம் அமையும்.

**காமாட்சி விளக்கு:** மஞ்சள், குங்குமம், வெள்ளை பூக்கள் சாத்தி, 5 ரூபாய் நாணயம் போட்டு விளக்கேற்றினால் வீடு கட்டும் யோகம் உண்டாகும்.

**தினமும் காலையில்:** 6–7 மணிக்குள் விளக்கேற்றினால் நவகிரகங்களின் அருள் கிடைத்து, பூமி யோகம் உண்டாகும்.

காலை 6 முதல் 7 வரையிலான நேரம் என்பது ஞாயிறு–சூரியன் திங்கள்–சந்திரன், செவ்வாய்–செவ்வாய் புதன்–புதன் வியாழன்–குரு வெள்ளி–சுக்கிரன் சனி–சனி என நவகிரகங்களில் பாவ கிரகங்களான ராகு என தவிர்த்து மற்ற ஏழு கிரகங்களையும் குறிக்கின்ற ஹோரை நேரம் எனவே இந்த நேரத்தில் விளக்கு ஏற்றுவது நவகிரகங்களின் அருளை கொடுத்து பூமி யோகத்தை உண்டாக்கும்.

**இந்த பரிகாரங்கள் ஏன் பயனுள்ளதாக இருக்கும்?**

வாமனர் மூன்று உலகையும் அளந்தவர் என்பதால், நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பார்.

காமாட்சி/கஜலட்சுமி செல்வத்தின் அதிதேவதை. விளக்கேற்றுவதன் மூலம் செல்வ வளம் பெருகும்.

நாணயம் குபேரனுக்கு உரியது. இதன் மூலம் பணவரவு அதிகரிக்கும்.

காலை 6–7 மணி நேரம் நவகிரகங்களின் அருள் கிடைத்து பூமி யோகம் உண்டாகும்.

# அதிபர் டிரம்பின் மகள் இவான்காவை கொல்ல சதித்திட்டம்..?



அமெரிக்கா, மே. 25–

2024 தேர்தல் பிரசாரம் தொடங்கி நேற்று வரை அமெரிக்க அதிபர் டிரம்ப் மீது பல்வேறு கொலை முயற்சிகள் நடந்துள்ளன. ஆனால் ஒவ்வொன்றில் இருந்து நூலிழையில் அதிர்ஷ்ட வசமாக அவர் தப்பியுள்ளார்.

நேற்று வெள்ளை மாளிகை மீது துப்பாக்கிச்சூடு நடத்திய 21 வயது இளைஞர் பாதுகாப்பு அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானுடன் அமெரிக்கா போரிட்டு வரும் நிலையில் இந்த கொலை முயற்சிகளுக்கு பின்னால் ஈரானின் கை உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சூழலில் அதிபர் டிரம்ப் உடைய மகள் இவான்கா டிரம்பைப் படுகொலை செய்வதற்காக ஒரு பயங்கரவாத சதித்திட்டம் தீட்டப்பட்டதாக நியூயார்க் போஸ்ட் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையுடன் தொடர்புடைய முகமது பக்கர் சாத் தாவூத் அல் சாதி என்ற நபர் இந்த சதித்திட்டத்தின் மூளையாக இருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

2020ல் ஈரானிய ராணுவத் தளபதி காசெம் சுலைமானி கொல்லப்பட்டதற்குப் பழி வாங்கும் விதமாக இவான்கா வைக் கொல்லப் போவதாக அவர் சபதம் செய்திருப்பதாக கூறப்படுகிறது. இவான்கா தனது கணவர் ஜாரெட் குஷ்னர் உடன் புளோரிடாவில் உள்ள தங்களின் 24 மில்லியன் டாலர் மதிப்புள்ள இல்லத்தில் வசித்து வருகிறார். முகமது பக்கர், இவான்காவின் இல்லத்தின் வரைபடத்தை சமூக ஊடகங்களில் பதிவிட்டு, "உங்கள் அரண்மனைகளோ அல்லது உளவு அமைப்புகளோ உங்களைப் பாதுகாக்க முடியாது"என்று அண்மையில் கூறியிருந்தார். அவர் மே 15 அன்று துருக்கியில் கைது செய்ய ப்பட்டு அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டதாக அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

# அமைச்சர் செங்கோட்டையன் மருத்துவமனையில் அனுமதி!



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக கோவையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோவை அவிநாசி சாலையில் உள்ள ஒரு முன்னணி தனியார் மருத்துவமனையில் லேசான காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## ஆரோக்கியம் காக்க... எதைச் சாப்பிடுவது... எதைத் தவிர்ப்பது?



காலை உணவுக்கு கேன் ஜூஸ்களைத் தவிர்த்து, பழச்சாறுகளைத் தயாரித்துச் சாப்பிடலாம். காற்றடைத்து விற்கப்படும் சிப்ஸ்களைத் தவிர்த்துவிட்டு, கடலை உருண்டை, எள்ளு உருண்டைகளைச் சாப்பிடலாம்.

சூப்பர் மார்க்கெட்களில் கிடைக்கும் காய்கறிகளைவிட, மார்க்கெட்டில் கிடைக்கும் காய்கறி, பழங்கள், கீரைகள் வாங்கிச் சாப்பிடுவது நல்லது.

'பளிச்' வெள்ளைச் சர்க்கரை வேண்டாம். சத்தும் சுவையும் நிறைந்த கருப்பட்டி, வெல்லம், பனங்கற்கண்டு, தேன் போன்றவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.

இளநீரை அவ்வப்போது குடித்தாலே போதும், சருமம் முதல் குடல் வரை ஆரோக்கியம் காக்கும் சிறந்த பானம் அது.

மைதாவால் தயாரிக்கப்பட்ட கேக், பிஸ்கெட், குக்கீஸ்களைத் தவிர்த்துவிட்டு, சிறுதானிய லட்டு, கேழ்வரகு லட்டு, சிறுதானிய இனிப்புப் பலகாரங்களைச் சுவைக்கலாம்.

டி.வி–யில் விளம்பரப்படுத்தப்படும் உணவுகளுக்கு விடை கொடுத்துவிட்டு, நாம் வீட்டில் செய்யக்கூடிய முறுக்கு, அதிரசம் போன்ற பலகாரங்களைச் சாப்பிடுவது நல்லது.

இரண்டு நிமிடத்தில் தயாராகும் இன்ஸ்டன்ட் உணவுகளுக்கு பதிலாக, சத்துக்களை அள்ளித்தரும் சிவப்பு அவல் சமைத்துச் சாப்பிடவும்.

ஐஸ் டீ, கோல்டு டீக்கு பதிலாக, சுக்கு காபி, கடுங்காபி, மூலிகை டீ, கிரீன் டீ ஆகியவற்றைக் குடிக்கலாம்.

பீட்சாவும் பர்கரும் சாப்பிட்டே ஆகணும் என்ற தூண்டுதல் இருந்தால், அதை நீங்களே சமைத்துச் சாப்பிடுங்கள். இதில் சேர்க்கப்படும் பொருட்கள் சமையல் அறையில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களாகவே இருக்கட்டும்.

சிறுதானியங்களைவிட சிறப்பான உணவாக நிச்சயம் ஓட்ஸ் இருக்காது. சர்க்கரைநோய், இதய நோய், கெட்டக் கொழுப்பு ஆகியவற்றை தடுக்கும் சக்தி சிறுதானியங்களுக்கு உண்டு. சாக்லேட்டுக்கு பதிலாக, இஞ்சி மொரபா, பேரீச்சை, கருப்பட்டியைச் சுவைக்கலாம்.

## ‘முதல்-அமைச்சர் விஜய்யிடம் மேயர் பிரியா நேரில் பேச வேண்டும்’ - பா.ஜ.க. வலியுறுத்தல்!



சென்னை, மே. 25–

சென்னையில், தமிழக பா.ஜ.க. மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

“சென்னையில் மாநகராட்சியின் சார்பில் மாதாந்திர கூட்டம் நடைபெற வேண்டும். ஆனால் இதுவரை எந்த அறிவிப்பும் வரவில்லை. எனக்கு கிடைத்த தகவலின்படி மேயர் பல முறை மாநகராட்சி கூட்டத்தை நடத்த கமிஷனரிடம் தெரிவித்து இருக்கிறார். ஆனால் எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை.

முதல்–அமைச்சராக விஜய் பதவியேற்றதும் முன்னாள் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வீட்டுக்கு சென்று மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அதுபோல் மேயர் பிரியா ஆணவம் பார்க்காமல் முதல்–அமைச்சர் விஜய்யை மரியாதை நிமித்தமாக சந்திக்க வேண்டும். அதுதான் மாநகராட்சியின் மரபு. ஜெயலலிதா 2–வது முறை முதல்–அமைச்சராக பதவியேற்ற போது, சென்னை மேயர் என்ற முறையில் மு.க.ஸ்டாலினும் எதிர்கட்சி தலைவராக இருந்த பேராசிரியர் அன்பழகனும் விழாவுக்கு சென்று 6–வது வரிசையில் அமர்ந்தனர். சுனாமி பாதிப்பின்போது முதல்–அமைச்சர் ஜெயலலிதாவிடம் மு.க.ஸ்டாலின் நிதி கொடுக்க வந்தார். 50 பேர் நடுவில்தான் அவரை உட்கார வைத்தார்கள்.

அவர் வரிசையில் நின்றுதான் பார்த்தார். அப்போது மேயராக பொறுப்பில் இருந்த நானும் சென்றிருந்தேன். எனவே அவரைப்போல் மேயர் பிரியாவும் உடனடியாக முதல்–அமைச்சர் விஜய்யை சந்தித்து சென்னை மாநகராட்சி கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எந்த வேலையும் நடக்காமல் மாநகராட்சி நிர்வாகம் ஸ்தம்பித்து விடும். மேயர் பிரியா முதல்–அமைச்சரை பார்க்க மு.க.ஸ்டாலின் ஏற்பாடு செய்ய வேண்டும்.”

இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியாவில் வெப்ப அலை - எச்சரிக்கை விடுத்த வானிலை ஆய்வு மையம்...!



சென்னை, மே. 25–

கோடை வெயிலின் தாக்கம் இந்தியா முழுவதும் கொடூரமாக இருக்கிறது. இதுவரை இல்லாத வகையில் வடமாநிலங்களில் வெப்ப அலையின் கொடூர முகத்தினால் அங்குள்ள மக்கள் கடும் அவதிக்குள்ளாகி போய் இருக்கின்றனர்.

வெப்ப அலையின் தாக்கத்தால் உயிரிழப்புகளும் இந்தியாவில் ஏற்பட்டு உள்ளன. வெப்ப அலை காரணமாக கடந்த 2 நாட்களில் மட்டும் தெலுங்கானா மாநிலத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே முடிந்தவரை பயணங்களை தவிர்க்க வேண்டும். என்றும் யாரும் வீடுகளை விட்டு வெளியே அவசியமின்றி வர வேண்டாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. வெப்ப அலை காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.4 லட்சம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலும் வெப்பத்தின் தாக்கம் நீடிக்கும் என்றும், வெப்ப அலையால் பாதிப்பு தொடரும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. அதிலும் மத்திய பிரதேசம் மற்றும் விதர்பா பகுதிகளில் கடுமையான வெப்ப அலைக்கான ‘ரெட் அலர்ட்’ விடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு வெப்பநிலை 113 டிகிரி (45 செல்சியஸ்) முதல் 116 டிகிரி (47 செல்சியஸ்) வரை பதிவாகக் கூடும் என கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு அதிக வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கலந்த அசவுகரியமான வானிலை நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வெப்ப அலை இருக்கும் அளவுக்கு வெயிலின் தாக்கம் இருக்காது என கூறப்பட்டுள்ளது.

இது ஒரு புறம் இருக்க தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக இன்றும் நாளையும் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது.

அதன்படி நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கனமழையும், தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், மே. 26 கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல், காற்றுடன் கனமழையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

## வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்; 236 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 197 சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் சேலம்

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 39 சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் காஞ்சிபுரம்

பணியிடங்கள்: சேலம் / காஞ்சிபுரம்

தொடங்கும் தேதி: 22.05.2026 (சேலம்) 25.05.2026 (காஞ்சிபுரம்)

கடைசி தேதி: 29.06.2026 (சேலம்) 03.06.2026 (காஞ்சிபுரம்)

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://salem.nic.in/

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://kancheepuram.nic.in/

## சென்னை சுற்றுவட்ட ரயில் பயணிகளுக்கு குட் நியூஸ்!



சென்னை, மே. 25–

சென்னை புறநகர் ரயில் பயணிகளுக்கு முக்கியமான கட்டமைப்பு பற்றிய அப்டேட் வெளியாகியுள்ளது. அரக்கோணம்செங்கல்பட்டு இடையே 68 கி.மீ. ரயில் பாதையை இரட்டை வழித்தடமாக மாற்றும் ரூ.993 கோடி மதிப்பிலான திட்டத்திற்கு இந்திய ரயில்வே ஒப்புதல் வழங்கியுள்ளது. நீண்ட காலமாக அதிக நெரிசலில் இயங்கி இந்த பாதைக்கு இந்த திட்டம் பெரிய நிவாரணமாக பார்க்கப்படுகிறது.

**இரட்டை ரயில் பாதைக்கு ஒப்புதல்;**

தற்போது ஒற்றை வழித்தடமாக செயல்படும் இந்த ரயில் பாதை, காஞ்சிபுரம், திருமால்பூர், தக்கோலம், வாலாஜாபாத் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. திறனை மீறி 104% முதல் 105% வரை பயன்பாட்டில் இயங்கும் இந்த பாதையில், ரயில் சேவைகளை அதிகரிப்பது சவாலாக இருந்தது. இதனால் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து இரண்டிலும் அழுத்தம் அதிகரித்தது.

**சென்னை புறநகர் சுற்றுவட்ட ரயில் இணைப்பு**

இந்த திட்டம், சென்னை புறநகர் சுற்றுவட்ட ரயில் இணைப்பு திட்டத்தின் முக்கிய பகுதியாக கருதப்படுகிறது. சென்னை பீச், தாம்பரம், செங்கல்பட்டு, அரக்கோணம், ராணிப்பேட்டை, ஆவடி ஆகிய பகுதிகளை இணைக்கும் பெரிய ரயில் பாதையில் இது முக்கியமானது. திட்டம் நிறைவேறினால், தற்போதைய நீண்ட வழித்தடத்தை விட நேரடி மற்றும் வேகமான புறநகர் இணைப்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

## 12-ம் வகுப்பு விடைத்தாள் நகல்களை பெற காலக்கெடு மீண்டும் நீட்டிப்பு!




சென்னை, மே. 25–

மே 22–ஆம் தேதியிட்ட சுற்றறிக்கையின் தொடர்ச்சியாகவும், மதிப்பீடு செய்யப்பட்ட தங்களது விடைத்தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களை பெறுவதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்க மாணவர்களுக்கு போதுமான அவகாசம் அளிக்கும் வகையிலும், கடைசிதேதி மேலும்நீட்டிக்கப்பட்டுள்ளது என்று வாரியம் தெரிவித்துள்ளது.

“இந்த வசதியின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடரும்” என்று தெளிவுபடுத்திய அதேவேளையில், நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவை பயன்படுத்திக்கொண்டு அதற்கேற்ப தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு வாரியம் அறிவுறுத்தியது. “மறுமதிப்பீட்டுக் கோரிக்கைகளை ஏற்கும் தொடக்கத் தேதி விரைவில் தெரிவிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது,” என அந்தச் சுற்றறிக்கை தெரிவித்தது.




நல்லாசிரியர், முனைவர் சண்முகதிருகுமரன் அவர்களின் பணி நிறைவு விழாவில் நிலா இலக்கிய மன்றம் தலைவர் கவிக்குயில் கணேசன் சிறப்பித்தார் அருகில் வழங்க்கறிஞர் சுந்தரமூர்த்தி உள்ளார்



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் மண்டலம்–4, வார்டு–37, சூசையாபுரம் வெஸ்ட், ரயில்வே லைன், அணைப்பாளையம், எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் வழங்குவது குறித்து பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் துணை மேயர் திரு.ரா. பாலசுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் (பொ) திரு. ராம்மோகன், சுகாதார அலுவலர் திரு.ராஜேந்திரன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## சினிமா துளிகள்..!



## விஜய் ரசிகர்களுக்கு இரட்டிப்பு கொண்டாட்டம்!



எச்.வினோத் இயக்கத்தில் முதலமைச்சர் விஜய் நடிப்பில் உருவாகி உள்ள படம் ‘ஜனநாயகன்’. கடந்த பொங்கல் பண்டிகையையொட்டி திரைக்கு வர இருந்த இந்த படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் படம் திரைக்கு வருவதில் இழுபறி நீடித்து வருகிறது. இது ஒருபுறமிருக்க ‘ஜனநாயகன்’ படம் ஆன்லைனில் கசிந்ததால் மேலும் படத்திற்கு சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனிடையே, விஜய் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள நிலையில் படத்திற்கான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

‘ஜனநாயகன்’ படத்தின் தயாரிப்பாளர் வெங்கட் கே. நாராயணா நேற்று திருச்செந்தூர் கோவிலில் தரிசனம் செய்தார். தரிசனம் முடிந்து அவர் அளித்த பேட்டியில், ‘ஜனநாயகன்’ தணிக்கை சான்றிதழ் வருவதற்காக காத்திருக்கிறோம். விரைவில் கிடைத்து விடும் என நம்புகிறோம். எவ்வளவு சீக்கிரம் படத்தை வெளியிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ‘ஜனநாயகன்’ படத்தை வெளியிடுவோம் என்று கூறினார்.

இந்த நிலையில், தற்போது ‘ஜனநாயகன்’ படம் குறித்த தகவல் ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இதனால் டிரெண்டிங்கில் ‘ஜனநாயகன்’ முதலிடத்தில் உள்ளது. அதாவது ‘ஜனநாயகன்’ படம் ஜூன் மாதம் 19–ந்தேதி வெளியாகிறது என்ற தகவலே சமூக வலைத்தளங்களில் உலாவருகிறது. விஜய் பிறந்தநாளையொட்டி ஜூன் மாதத்தில் ‘ஜனநாயகன்’ வெளியிடப்படலாம் என்றே கூறப்படுகிறது. இது உண்மையாக இருக்கும்பட்சத்தில் ரசிகர்களுக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கும். ஜூன் 19–ந்தேதி ‘ஜனநாயகன்’ வெளியீடு, ஜூன் 22–ந்தேதி விஜய் பிறந்தநாள் என இரு கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட உள்ளது.

முன்னதாக, ‘ஜனநாயகன்’ படம் வெளியீட்டு தேதி குறித்த பல்வேறு யூகங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில் தற்போது உலா வரும் தகவல் எந்த அளவுக்கு உண்மை என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்...

## பொதுமக்கள் தங்கள் குறைகளை உடனுக்குடன் தெரிவிக்க “தொலைபேசி எண்கள்”



மதுரை, மே. 25–

மதுரை மாநகராட்சி 100 வார்டு பகுதிகளில் உள்ள பொது மக்களின் வசதிக்காகவும், மாநகராட்சியின் சேவை குறித்து புகார் அளிப்பதை எளிதாக்கி நிவர்த்தி செய்திடும் வகையில் குறிப்பாக குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், திடக்கழிவு சேகரிப்பு, சாலைகள் பராமரிப்பு உள்ளிட்ட புகார் குறித்து பொதுமக்கள் தொலைபேசி வாயிலாக தெரிவிப்பதற்கு தொலைபேசி எண். 90039 90030 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவும் மற்றும் வாட்ஸ்அப் எண். 96001 12811 என்ற எண்ணில் வாட்ஸ் அப் மூலம் புகார் தெரிவிக்கலாம். புகார்கள் பதிவு செய்யப்பட்டவுடன் தானியங்கி முறையில் புகாரின் வகைக்கு ஏற்ப மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு புகாரின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் பொதுமக்கள் தங்கள் மொபைல் போனில் இருந்தே தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை சார்பில் ”Smartmadurai” என்ற செயலி வாயிலாகவும் மற்றும் மாநகராட்சியின் 24 மணி நேர கட்டுப்பாட்டு புகார் எண். 90039 90030 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவும் மற்றும் வாட்ஸ்அப் எண். 96001 12811 மூலமும் தெரிவித்து பயன்பெறுமாறு மதுரை மாநகராட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

## இனி கொடைக்கானலை இலவசமா சுற்றிப் பார்க்கலாம்!



கொடைக்கானல், மே. 25–

கொடைக்கானலில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களை பொதுமக்கள் பார்வையிட இன்று (மே 25) முதல் மே 31 வரை கட்டணம் வசூலிக்கப்படாது என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன் கீழ் பில்லர் ராக், குணா குகை, பைன் மரக் காடுகள், மோயர் சதுக்கம் உள்ளிட்ட முக்கிய சுற்றுலா இடங்களுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், கடந்த சில நாட்களாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்து வருகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# தி.மு.க.,வில் மீண்டும் செயல் தலைவர் பதவி?




சென்னை, மே. 25–

'தி.மு.க.,வில் மீண்டும் செயல் தலைவர் பதவியை உருவாக்கி, கட்சியை பலப்படுத்த வேண்டும்' என, துணை பொதுச்செயலர் கனிமொழி, இளைஞரணி செயலர் உதயநிதி ஆதரவாளர்கள், தலைமையை வலியுறுத்த துவங்கி உள்ளனர். நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க., சந்தித்த பெரும் தோல்விக்கான காரணத்தை அறிய, 36 பேர் கொண்ட கள ஆய்வுக்குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த குழு, தனது அறிக்கையை ஜூன் 5ம் தேதி தி.மு.க., தலைவர் ஸ்டாலினிடம் அளிக்க உள்ளது. அதன் அடிப்படையில், கட்சி நிர்வாக அமைப்பை மாற்ற அவர் திட்டமிட்டுள்ளார். இந்நிலையில், தி.மு.க., வில் மீண்டும் செயல் தலைவர் பதவியை உருவாக்கி, கனிமொழியை அந்த பதவியில் அமர்த்த வேண்டும் என, திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த, முன்னாள் ஊராட்சி தலைவர் மற்றும் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.ஜி. ரவி வலியுறுத்தி உள்ளார்.

அதேநேரத்தில், சென்னை அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடந்த தி.மு.க., இளைஞரணி கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகள், செயல் தலைவராக உதயநிதி பதவி ஏற்க வேண்டும் என கூறியுள்ளனர். தி.மு.க.,வில் செயல் தலைவர் பதவி என்பது, ஏற்கனவே உருவாக்கப்பட்ட பதவி. மறைந்த முன்னாள் தலைவர் கருணாநிதி உடல்நலம் குன்றி, தீவிர அரசியலில் ஈடுபட முடியாமல் இருந்தபோது, 2017ல் நடந்த பொதுக்குழுவில், செயல் தலைவர் என்ற புதிய பதவி உருவாக்கப்பட்டு, அதில் ஸ்டாலின் நியமிக்கப்பட்டார்.

2018ம் ஆண்டில் கருணாநிதி மறைவுக்கு பின், தி.மு.க., தலைவராக ஸ்டாலின் பொறுப்பேற்றார். செயல் தலைவர் பதவி, தி.மு.க.,வின் விதிகளில் இருந்து அதிகாரப்பூர்வமாக நீக்கப்பட்டது. தற்போது மீண்டும் செயல் தலைவர் பதவி குறித்த பேச்சு எழுந்துள்ளது.

இதுகுறித்து தி.மு.க., மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: சட்டசபை தேர்தலில், கனிமொழி போட்டியிட விருப்பம் தெரிவித்து, 30 பேர் மனு அளித்தும், கட்சி தலைமை அதை புறக்கணித்தது.

இளைஞரணி, மகளிரணி நிர்வாகிகளுக்கு வாய்ப்பு தராமல், மாவட்ட செயலர்கள், ஸ்டாலின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் தடுத்து விட்டனர். இளைஞரணியில், 3 பேருக்கு மட்டுமேவாய்ப்பு அளிக்கப்பட்டது.

வரும் உள்ளாட்சி தேர்தலில், தங்களுக்கு வாய்ப்பு கிடைக்காது என கருதும் இளைஞர்கள், தமிழக வெற்றிக் கழகத்துக்கு தாவ தயாராகி விட்டனர். இதை தடுக்கவே, அவசரமாக இளைஞரணி கூட்டம் நடத்தி, காங்கிரசுக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றி, 'குஷி'ப்படுத்தியுள்ளனர்.

அதேபோல், கருணாநிதி பிறந்த நாள் கொண்டாட்டம் குறித்து, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக, கனிமொழி தலைமையில் மகளிரணி கூட்டம் நடந்தது.

துாத்துக்குடி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், நடிகை த்ரிஷா குறித்து தவறாக பேசியவர்களை, கனிமொழி கண்டித்தார். அவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில், அதிக வெற்றியை பெற்று தந்துள்ளார்.

எனவே, கனிமொழி தான் செயல் தலைவராக பதவி ஏற்க வேண்டும் என, மகளிரணி எதிர்பார்க்கிறது. முடிவு ஸ்டாலின் கையில் தான் உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மதமாற்றம் செய்ய யாருக்கும் உரிமையில்லை: அமித் ஷா எச்சரிக்கை!



புதுடில்லி, மே. 25–

பொது சிவில் சட்டம் பழங்குடியினரை பாதிக்காது. மற்றொரு நபரின் மத நம்பிக்கையை கட்டாயத்தின் பேரில் மாற்றுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை.' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக பழங்குடியின மக்களுக்காக போராடிய தியாகி பிர்சா முண்டாவின் 150வது பிறந்தநாள் ஆண்டைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற பழங்குடியின மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்று உரையாற்றினார்.

அவர் பேசியதாவது; பொது சிவில் சட்டம் பழங்குடியினரை எந்த வகையிலும் பாதிக்காது. இது குறித்து பரப்பப்படும் தவறான தகவல்களை நம்ப வேண்டாம். பாஜ ஆளும் மாநிலங்களில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும்போது, பழங்குடியின சமூகங்களை அதன் வரம்பிற்கு வெளியே வைப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொது சிவில் சட்டம் எந்தவொரு பழங்குடியின சகோதர, சகோதரிகளின் பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களில் தலையிடாது. நக்சல் வன்முறை காரணமாக பல ஆண்டுகளாக பழங்குடியினரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடு நக்சல் பிரச்னையிலிருந்து விடுபட்டு வருகிறது.

பழங்குடி மக்களை மதம் மாற்றுவதற்கு ஆசை வார்த்தை அல்லது தூண்டுதல்களைப் பயன்படுத்தக் கூடாது. மற்றொரு நபரின் மதநம்பிக்கையை கட்டாயத்தின் பேரில் மாற்றுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை, என்றார்.

# இபிஎஸ் அணிக்கு தாவிய அதிமுக எம்எல்ஏ!



சென்னை, மே. 25–

தவெக அமைச்சரவையில் இடம் கிடைக்காத நிலையில், எஸ்பி வேலுமணி தரப்புக்கு ஆதரவு தெரிவித்து வந்த ஆற்காடு எம்எல்ஏ சுகுமார், மீண்டும் இபிஎஸ் அணிக்கு தாவியுள்ளார்.

சட்ட சபை தேர்தல் முடிவுக்கு பிறகு அதிமுகவில் இபிஎஸ் மற்றும் சிவி சண்முகம், எஸ்பி வேலுமணி ஆகியோர் அடங்கிய அணி என்று இரண்டாக பிளவு பட்டது. திமுகவுடன் இணைந்து ஆட்சியமைக்க இபிஎஸ் முயன்றதாக குற்றம்சாட்டிய எஸ்பி வேலுமணி அணி, தவெக ஆட்சியமைக்க ஆதரவு அளித்தது. இதையடுத்து, சிவி சண்முகம், எஸ்பி வேலுமணி உள்ளிட்டோரின் கட்சி பொறுப்புகளை பறித்து இபிஎஸ் அதிரடி நடவடிக்கை எடுத்தார். மேலும் மாவட்ட செயலாளர்களை அழைத்து தனது பலத்தையும் நிரூபித்தார். இதனிடையே, அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என்று சிவி சண்முகம் தரப்பு எதிர்பார்த்து இருந்ததாக கூறப்படும் நிலையில், விசிக, கம்யூனிஸ்ட், முஸ்லீம் லீக் கட்சிகளின் நிபந்தனைகளால் அது நடக்காமல் போனது. இது அவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், எஸ்பி வேலுமணி தரப்புக்கு ஆதரவு தெரிவித்து வந்த ஆற்காடு எம்எல்ஏ சுகுமார், மீண்டும் இபிஎஸ் அணிக்கு தாவியுள்ளார். சென்னையில் உள்ள அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்ஸை வீட்டில் சென்று நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார். இது சிவி சண்முகம் தரப்புக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திள்ளது

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் அருகே சிறுவன் படுகொலை!

மதுரை, மே. 25–

மீனாட்சி அம்மன் கோயில் அருகே 17 வயது சிறுவன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே வடக்கு ஆவணி மூல வீதி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான கார் பார்க்கிங் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று நள்ளிரவு குபேந்திரன் என்ற சிறுவனை பைக்கில் வந்த கும்பல் ஒன்று சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதுகுறித்து தகவலறிந்த விளக்குத்தூண் போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அப்பகுதியிலுள்ள சிசிடிவி காட்சி பதிவுகளை கைப்பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அதில் கடந்த மாதம் சித்திரை திருவிழாவின் போது குபேந்திரனுக்கும் அதே பகுதியைச் சேர்ந்த முத்துமணி என்ற தொத்தல் முத்துமணி என்பவருக்கும் இடையே வடக்கு மாசி வீதி அருகில் கழிப்பறையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

அப்போது இருவரும் ஒருவரை ஒருவரை கடுமையாக தாக்கியபோது முத்துமணிக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த முத்துமணி என்கின்ற தொத்தல் முத்துமணி சிறுவன் குபேந்திரனை கொலை செய்ய திட்டம் தீட்டியது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் நேற்றிரவு சிறுவன் குபேந்திரன் மீனாட்சியம்மன் கோயில் கார் பார்க்கிங் அருகே நின்றிருந்தபோது அங்கு 2 பைக்குகளில் வந்த முத்துமணி மற்றும் அவனது தம்பி ராஜ் மற்றும் சதீஷ் குமார், ஹரி கிருஷ்ணன், முத்துக்குமார் ஆகிய 5 பேர் கொண்ட கும்பல் குபேந்திரனை பயங்கர ஆயுதங்களால் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

மேலும், சிறுவன் குபேந்திரன் அவர்களிடம் இருந்து தப்பி ஓட முயற்சித்த போதும் விடாமல் விரட்டிச் சென்ற முத்துமணி கும்பல் சிறுவனை சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்துள்ளது. மேலும், கொலை செய்த கும்பலானது அங்கிருந்து தப்பியோடியது சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது.

இதனைத்தொடர்ந்து சிறுவனின் உடலைக் கைப்பற்றிய விளக்குத்தூண் போலீஸார், உடற்கூராய்விற்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் இது குறித்து வழக்குப் பதிவு செய்த காவல்துறையினர் தப்பியோடிய கும்பலை தேடி வருகின்றனர். கொலை செய்யப்பட்ட சிறுவன் மீதும் ஆயுதம் வைத்திருத்தல் உட்பட 5 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாக்கப்பட்ட பகுதியாக உள்ள மீனாட்சி அம்மன் கோவில் அருகே இதுபோன்ற சட்டவிரோதச் செயல்கள் நடைபெறுவதை தடுக்க, காவல்துறையினர் தீவிர ரோந்துப் பணி மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே 17 வயது சிறுவன் வெட்டிப் படுகொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 'சட்டம் ஒழுங்கை சீர்செய்யுங்கள்': முதல்-அமைச்சர் விஜய்க்கு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்!



சென்னை, மே. 25–

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவத்;

"மதுரை கீழமாத்தூரில் 10–ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த த.வெ.க. நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகே 17 வயது சிறுவன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதாகவும் வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

மேலும், தாம்பரம் அருகே கல்லூரி மாணவியை தவறான முறையில் பார்த்த த.வெ.க நிர்வாகி கைது செய்யப்படுள்ளதாகவும், திருவொற்றியூரில் நள்ளிரவில் மின்துறை உதவிப் பொறியாளர் வீட்டின் கதவைத் தட்டி அச்சுறுத்தி ஆளும் த.வெ.க.வினர் மிரட்டியதாகவும் செய்திகள் வருகின்றன.

மேலும் சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று மழை பெய்த நிலையில் பல இடங்களில் மழைநீர் சூழ்ந்திருந்தது. இன்று காலை ஓமலூரில் உள்ள இரயில்வே சுரங்கப் பாதையை காரில் கடக்க முயன்ற கணவன் மனைவி இருவரும் அங்கு தேங்கியிருந்த தண்ணீரில் மூழ்கி இறந்துள்ளதாக வரும் செய்திகள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரயில்வே சுரங்கப் பாதையில் தேங்கிய மழைநீரை இந்த அரசு உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளாததால் இன்று நாம் இரண்டு விலைமதிப்பற்ற உயிர்களை இழந்துள்ளோம்.

சிறப்பான ஆட்சியை தருவேன், மாற்றம் கொண்டு வருவேன் என்று முதல்வர் வசனம் பேசினார். ஆனால் ஒவ்வொரு நாளும் விலைமதிப்பற்ற உயிர்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். இந்த பொய்க்கால் குதிரை ஆட்சியிலும் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. ஆளுங்கட்சி நிர்வாகிகளுக்கு மதுரை சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக செய்திகள் வருகின்றன. அதுபோக, ஆளுங்கட்சியினரின் மிரட்டல் அராஜகங்கள், குறிப்பாக அரசு ஊழியர்களை அச்சுறுத்தும் போக்கு என்பது தொடர்கிறது. முந்தைய ஆட்சிபோல் தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு எந்த பதிலும் சொல்லாமல், செய்தியாளர் சந்திப்பு நடத்த முடியாத முதல்வர் தான் இப்போதும் வாய்த்துள்ளார். ட்விட்டர் மடைமாற்று அரசியலில் திமுக ஈடுபட்டது என்றால், இன்ஸ்டாகிராம் ரீல் மடைமாற்று அரசியலில் இன்றைய ஆளுங்கட்சி ஈடுபடுகிறது. அவ்வளவு தான்!

"முதல்வர் கோட்டைக்கு வருகிறார்! கேரியில் மதிய உணவு சாப்பிடுகிறார்! ஆஹா என்ன ஒரு மாற்றம்?" என்று ஒரு தனி உலகத்தை இவர்கள் கட்டமைக்கும் வேளையில், தமிழ்நாடு ரத்தக்காடாக மாறி வருவது பற்றியும், தங்கள் கட்சியினர் பொறுப்புணர்வின்றி போடும் அதிகார வெறியாட்டம் பற்றியும் ஒருவார்த்தையாவது பேசுவார்களா?

உங்களுக்கு வாக்களித்த தமிழக மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை இருந்தால், அவர்களை காப்பாற்ற சட்டம் ஒழுங்கை சீர்செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள் என்று இந்த முதல்வரை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க. ஆட்சி அமைப்பதை தடுக்க தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி அமைக்க முயன்றது ஏன்? - பின்னணி குறித்து பரபரப்பு தகவல்கள்!



சென்னை, மே. 25–

தமிழகத்தில் முதல் சட்டசபை தேர்தல் நடைபெற்ற 1952–ம் ஆண்டுக்கு பிறகு தற்போது (2026) கூட்டணி ஆட்சி அமைந்திருக்கிறது. அப்போது, ராஜாஜி முதல்–அமைச்சராக இருந்தார். தற்போது, ஜோசப் விஜய் முதல்–அமைச்சராக இருக்கிறார்.

74 ஆண்டு கால தமிழக அரசியல் வரலாற்றில், 7 முறை அ.தி.மு.க.வும், 6 முறை தி.மு.க.வும், 3 முறை காங்கிரஸ் கட்சியும் ஆட்சி அமைத்துள்ளது. அதுவும் 1952–ம் ஆண்டு முதல் 1967–ம் ஆண்டு வரை, முதல் 15 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. அடுத்த 59 ஆண்டுகள் தி.மு.க., அ.தி.மு.க. என திராவிட கட்சிகளே மாறி.. மாறி.. ஆட்சி செய்து வந்தன.

### பெரும்பான்மை இல்லை

திரைப்பட நடிகரான எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வை 1972–ம் ஆண்டு தொடங்கினாலும், 1977–ம் ஆண்டே அவரால் ஆட்சியை பிடிக்க முடிந்தது. ஆனால், 2024–ம் ஆண்டு தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கிய நடிகர் ஜோசப் விஜய், கட்சி ஆரம்பித்த 2 ஆண்டுகளிலேயே ஆட்சியை பிடித்து அசத்தி இருக்கிறார்.

ஆனாலும், த.வெ.க.வுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியை அமைத்துள்ளது.

### ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்குமா?

இந்த கூட்டணி ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்குமா? என்பது ஒரு பக்கம் எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்பாக இருந்தாலும், மற்றொரு பக்கம் த.வெ.க.வை ஆட்சியமைக்க விட்டுவிடக்கூடாது என்பதில், ஆண்ட கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கைகோர்த்து ஆட்சி அமைக்க முயற்சி மேற்கொண்டதும் தற்போது அம்பலமாகி இருக்கிறது.

அதுவும்கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக (54 ஆண்டுகள்) எதிர் எதிர் துருவங்களாக பயணித்த கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் எப்படி ஒன்று சேர்ந்து த.வெ.க. ஆட்சி அமைப்பதை தடுக்க முயற்சித்து இருக்கும்? என்று அனைவரும் நினைக்கலாம்.

### திரை மறைவில் பேச்சு

தேர்தல் முடிவு வந்த நாளான மே 4–ந் தேதி இரவு முதல் 8–ந் தேதி வரை தமிழக அரசியலில் என்னென்னவோ நடந்து இருக்கிறது. அப்போதே, திரை மறைவில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் பேச்சு வார்த்தை நடத்தி கூட்டணி ஆட்சி அமைக்க முயற்சி நடப்பதாக பரபரப்பாக பேசப்பட்டது.

ஆனால், அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் த.வெ.க.வுக்கு ஆதரவு அளிக்கும் நிலைப்பாட்டை எடுத்ததால், தி.மு.க. – அ.தி.மு.க. கூட்டணி பேசிய விவகாரம் அத்துடன் காணாமல் போனது.

### நடந்தது உண்மையா?

ஆனால், இப்போது அந்த விவகாரம் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியிருக்கிறது. தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஆட்சி அமைக்க கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தியது என்று, அ.தி.மு.க. அதிருப்தி எம்.எல்.ஏ. சி.வி.சண்முகம் வெளிப்படையாக தெரிவித்தார். அதே கருத்தை இப்போது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீனும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் இதுவரை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தரப்பிலோ, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பிலோ மறுப்பு தெரிவிக்கப்படவில்லை. அதனால், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்பதை உறுதியாக சொல்லமுடியாது. நடந்திருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

### எதிரும் புதிருமான கட்சிகள்

அது எப்படி, கடந்த 54 ஆண்டுகளாக தமிழகத்தில் எதிரும் புதிருமான கட்சிகளாக இருந்த தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இப்படி நடந்து கொண்டிருக்கும்?. தேர்தல் பிரசாரத்தின்போது தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் ஒருவரை ஒருவர் எப்படியெல்லாம் தாக்கி பேசிக்கொண்டனர். அப்படி இருந்தும் இது எப்படி நடந்தது?. அதற்கு என்ன காரணம்? என ஆராயாமல் இருக்க முடியாது.

தமிழ்நாட்டில், காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற முதல் 15 ஆண்டுகள் ஆட்சியாளர்கள் அரசை நடத்த எந்தக் கடனும் வாங்கவில்லை. வரவு குறைவாக இருந்தாலும் அதற்குள்ளேயே செலவையும் வைத்துக்கொண்டனர்.

### வெள்ளை அறிக்கை

ஆனால், 1967–ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைத்த பிறகும், அதன்பிறகு 1977–ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகும், திட்டங்களுக்கு என்ற பெயரில் கடன்கள் வாங்கி குவிக்கப்பட்டன. அந்த கடன்கள் தான் இப்போது ரூ.10 லட்சம் கோடி என்ற அளவில், இமயமலை போல் வளர்ந்து நிற்கிறது.

இப்போது, ஆட்சி அமைத்திருக்கும் த.வெ.க. அரசு, தமிழகத்தின் நிதி நிலைமை தொடர்பாக விரைவில் வெள்ளை அறிக்கை வெளியிடுவதாக கூறியிருக்கிறது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆனால், தோண்ட.. தோண்ட.. ஊழல் நடந்திருப்பதே தெரியவருகிறதாம். தற்போது, எந்தத் துறையில் எவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது? என்று பட்டியல் தயாராகி வருகிறதாம். வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்போது, ஊழல் பட்டியல்தான் பூதாகரமாக நிற்கும் என்று சொல்லப்படுகிறது.

### கரைபுரண்ட ஊழல்

அதுவும், தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய இரு திராவிட கட்சிகளின் ஆட்சி காலத்தில் ஊழல் கரைபுரண்டு ஓடியிருக்கிறதாம். எப்போதுமே, தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு சாதகமான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தனித்தனியாக இருப்பார்களாம். யார் ஆட்சிக்கு வருகிறார்களோ, அவர்களுக்கு சாதகமான அதிகாரிகள் அப்போது உயர் பதவிக்கு வந்துவிடுவார்களாம்.

ஆனால், இப்போது த.வெ.க. எனும் புதிய கட்சி ஆட்சியை பிடித்திருப்பதால், தி.மு.க., அ.தி.மு.க.வுக்கு சாதகமான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை ஒதுக்கிவிட்டு, புதிதாக அதிகாரிகளை உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர். இந்த அதிகாரிகள்தான் ஊழலை வெளியே கொண்டுவந்து கொண்டிருக்கிறார்களாம்.

### காரணம் இதுதான்

இதுபோன்று எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதை முன்கூட்டியே அறிந்தே தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து ஆட்சியை பிடிக்க திட்டமிட்டதாக பரபரப்பு தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இனி வெள்ளை அறிக்கை வரட்டும். அதன்பிறகு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020